முருகப்பெருமான் துணை

**மகான் நின்றசீர் நெடுமாற நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.08.2022**, செவ்வாய்கிழமை

1. ஜோதி சூட்சும தவராஜனே
சுப்பிரமண்யர் ஞான பலமாக
ஜோதி ஏற்றி சரவணச்சுடராய்
செகமெல்லாம் அருளும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரங்களென அறுநான்கு திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 24 நாள், 09.08.2022 செவ்வாய்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே நின்றசீர் நெடுமாற நாயனாரும்
தரணியோர் ஞானம்பெற உரைப்பேன்
மண்ணுலகில் தடையின்றி சித்திகள்
மகத்துவங்கள் மக்களடைய
4. அடையவே அரங்கமகானின்
ஆற்றல் மிக்க ஞானத்திருவடி
தடையின்றி பற்றி வருக
தவமாக ஞானம் பயின்று வருக
5. வருகவே குருவருள் என்கின்ற
வல்லமை வரமாகக் கிட்டி
கருமவினைகள் வெளியேறி
கந்தவேலன் தனை வணங்கும்
6. வணங்கும் அறிவும் தெளிவும்
வழிபாட்டின் பலமும் திடமும்
வணங்கவே தனித்துவமாகி
வந்தடையும் ஞானமெனும் பலம்
7. பலமான சூட்சும சக்திகளும்
பயபக்தி கூடி வரமாகி
வலம்வரும் பெருந்துணையாக
வளர்ச்சிதரும் ஞானிகளாகவே
8. ஆகவே ஞானிகள் பூசையும்
அன்னதானத்தின் மகிமையும்
வகைபட தானாகத் தொடர்ந்து
வந்தடையும் தெளிவும் மேன்மையும்
9. மேன்மைதரும் சக்தியாக அரங்கன்
முருகப்பெருமானை அடையும்
நன்மைதரும் தீட்சை அருள
நம்பிக்கை வைத்து மக்கள் ஏற்று

10. ஏற்றுமே சைவ நெறி முறையோடு
எல்லாம் அவன் செயலென
பற்றினை ஆறுமுகப் பெருமான்
பாதம் தனில் வைத்துத்தொடர

11. தொடரவே ஞானிகள் ஆவதுடன்
தூய்மையான தேசம் படைத்து
இடரில்லா ஞான ஆட்சி தருவர்
இயம்பிவந்த அருளாசி முற்றே

–சுபம்–